**இலங்கை போக்குவருத்துச் சபை - 2021**

**..............................................................**

1. **நிதிக்கூற்றுக்கள்**

**........................**

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

**...............................**

இலங்கை போக்குவருத்துச் சபையின் ‘‘சபை’’ 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுசூக்கள் மீது நான் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் பிரிவில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது ஒரு அபிப்பிராயத்திற்கான அடிபிபடையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு எனக்கு பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**.......................................................**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நான் ஒரு அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு

**.........................................................................................................................................**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

**.........................................................................................................................................**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 34,926,971 தொகையான கணனி மென்பொருட்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 38 இன் 72 ஆம் பிரிவின் பிரகாரம் கட்புலனாகாத சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படாது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. | நியம இலக்கம் 38 இன் பிரகாரம் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | பேரேட்டின் பிரகாரம் விமானப் படை போக்குவரத்து அனுமதிப்பத்திர வருமானம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 147,095,230 ஆக இருந்த போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 142,858,305 ஆக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான நட்டம் அத்தொகையினால் அதிகரித்திருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | விமானப் படை போக்குவரத்து அனுமதிப்பத்திர வருமானமானது சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையின் கணனி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கில் சொத்து விடயம் எது என்பது உறுதியாக இனங்காணப்படாத ரூபா 48,168,750 பெறுமதியான 04 வியடங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை தனித்தனியாக இனங்காணக்கூடிய அளவிற்கு போதியளவு அறிக்கை சபையிடம் இல்லாததன் காரணமதாக ரூபா 48,168,750 பெறுமதியை தனித்தனியாக இனங்காண்பதற்கு உள்ள இயலாமையின் அடிப்படையில் அவ்வாறு உள்ளடக்கப்பட்டுள்ளது. | காணிகள் மற்றும் கட்டிடங்களை தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் சபையின் ரூபா 391,317,296 தொகையான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீதி தனித்தனியாக காணிகள் மற்றும் கட்டிடங்களாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் கட்டிடங்களை பெறுமானத் தேய்வு செய்வதற்குரிய சொத்துக்கள் தொடர்பான விபரமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீதியின் மற்றும் கட்டிட பெறுமானத் தேய்வு மீதியின் சரியான தன்மையை மற்றும் சொத்துக்களின் உள்ளமை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | தற்பொழுது காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை இடம்பெற்றுவருவதுடன் அந்நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் பழைய மீதிகளையும் சரியான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் கட்டிடங்களின் பெறுமதி தொடர்பான பெறுமானத் தேய்வினை சரியாகக் காட்டுதல் வேண்டும். |
| (உ) | சபையின் கிரயம் இனங்காணப்படாத ஒரு கட்டிடமானது ரூபா 5,054,000,000 மதிப்பீட்டு பெறுமதிக்கு ஒரு அரசாங்க நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அது தொடர்பான கிரயம் காணிகள் | பதில் வழங்கப்படவில்லை. | காணியை ஒப்படைக்கும் கொடுக்கல் வாங்கலானது சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கட்டிடங்களின் பெறுமதியிலிருந்து நீக்கப்படாததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 4,954,000,000 தொகை மற்றும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 100,000,000 தொகை ஒதுக்கமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது கணனி மற்றும் டிக்கட் இயந்திரங்கள் ரூபா 6,470,984 தொகையால் அதிகரித்து பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் அதனால் வருடாந்த நட்டம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. | கணனி மற்றும் டிக்கட் இயந்திரத்திற்காக பெறுமானத் தேய்வு செய்தலானது கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் முறையாக கணிக்கப்பட்டு செம்மையாக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் சொத்துக்களை கொள்வனவு செய்ததன் காரணமாக காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 36,167,950 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் அதில் கடனுக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட 02 பஸ்களின் பெறுமதியான ரூபா 8,400,000 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க முதலீட்டு நடவடிக்கைகளின் கீழான காசு வெளிப்பாய்ச்சல் அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | லங்கா அசோக் லேலன்ட் நிறுவனத்தின் மூலம் 02 பஸ்கள் பணம் செலுத்தப்பட்டு இலங்கை போக்குவரத்து சபையால் கொள்வனவு செய்யப்பட்டது. எனவே அப்பெறுமதியை முதலீட்டு நடவடிக்கைகளில் உள்ளடக்குதல் சரியானதாகும். | கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் உள்ளபடியான காசு உட்பாய்ச்சலையும் வெளிப்பாய்ச்சலையும் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டுதல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டிற்கான வருமானக் கூற்றில் ஏனைய வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 4,192,994 தொகையான இருப்பு செம்மையாக்கல் கணக்கின் மீதி மற்றும் ரூபா8,786,886 தொகையான எரிபொருள் இருப்பு மிகை அல்லது பற்றாக்குறை கணக்கின் மீதி காசுப் பாய்ச்சல் கூற்றுக்கு செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. | உரிய இருப்பு மற்றும் எரிபொருள் இருப்பின் மிகை மற்றும் பற்றாக்குறை கணக்கின் மீதியை சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2001 ஆம் ஆண்டின் போது பஸ் இன்ஜின்களை கொள்வனவு செய்வதற்காக திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 2,981,392,313 மானியம் சொத்துக்களின் ஆயுட் காலத்திற்கு இணங்க வருடாந்தம் காலக்கழிவு செய்யப்படாது மீளாய்வாண்டின் போது முழுமையான மீதியையும் திரண்ட நட்டத்திற்கு செம்மையாக்கியதனால் திரண்ட நட்டம் அப்பெறுமதியால் குறைத்துக்காட்டப்பட்டிருந்ததுடன் சபையின் மறைப்பெறுமதியான தேறிய சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பஸ் இன்ஜின்களை கொள்வனவு செய்வது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட மானியத்தை (Grant) 05 ஆண்டுகளுக்குள் காலக்கழிவு (Amortize) செய்தல் வேண்டும். இந்த மானியம் 05 ஆண்டுகளுக்குள் காலக்கழிவு செய்யப்படாதிருந்ததுடன் அக்கணக்கீட்டுத் தவறினை சரி செய்வதற்காக அல்லது காலக்கழிவு செய்வதற்குரிய கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் உரிய செம்மையாக்கல்கள் செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க LKAS 20 மற்றும் LKAS 08 இன் பிரகாரம் செம்மையாக்கல் செய்யப்பட்டுள்ளது. | உரிய திறைசேரி மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களுக்காக வருடாந்தம் சொத்துக்களின் ஆயுட்காலத்திற்கு இணங்க காலக்கழிவு செய்தல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டிற்கான வங்கிக் கட்டணம் ரூபா 6,701,571 ஆக இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தும் அதனுள் ரூபா 711,616 தொகையான வங்கி மேலதிகப் பற்று வட்டியும் ரூபா 307,664 தொகையான ஒப்பந்த ஊதிய செலவுகளும் ரூபா 1,630,963 தொகையான ஊழியர் கடன் அறவீடுகளும் ரூபா 11,273 தொகையான சிங்கள புதுவருட விழாக் கடன் தவணைப் பண அறவீடுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. | உரிய தவறு இடம்பெற்றுள்ளது. இவ்வாறான தவறு இடம்பெற்றிருந்த போதிலும் அதன் மூலம் இலாப நட்ட கணக்கின் இறுதி தேறிய இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. | வங்கி கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஓ) | 2022 மே மாதம் 09 ஆந் திகதி நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக சபையின் ரூபா 7,300,000 கிரமான 03 வாகனங்களுக்கும் 12 டிப்போக்களின் ரூபா 76,749,438 கிரயமான 18 பஸ்களுக்கும் பாரிய அளவில் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தும் அது தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 10 இற்கு இணங்க | பதில் வழங்கப்படவில்லை. | ஐந்தொகை திகதியின் பின்னரான நிகழ்வுகள் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஔ) | சபையின் இருப்பு மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் உதிரிப் பாகங்களின் பௌதீக இருப்பு மீதி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,514,815,227 ஆக இருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இருப்பு ரூபா 1,637,684,553 ஆகும். அதற்கிணங்க நிதி நிலைமைக் கூற்றில் இருப்பு பெறுமதி ரூபா 122,869,326 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | உரிய இருப்பு மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் செம்மையாக்கி கணக்கு கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.2 அமைப்பு தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதி தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,790,092,091 மறை மீதியாக இருந்ததன் காரணமாக சபை தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் தொடர்பில் அது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | சபை தொடர்ச்சியாக நிலைத்திருத்தலினை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | நிலையான வைப்புக்களின் பெறுமதி | 111,556,382 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் | பதில் வழங்கப்படவில்லை. | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஆதனங்கள் பொறிகள் மற்றும் | 82,138,137 | சொத்துக்கள் பட்டோலை | இந்த விடயங்கள் 2017 ஆம் ஆண்டிற்கு | சரியாக உறுதிப்படுத்தி தேவையான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உபகரணங்கள் | | | முன்னர் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட விடயங்களாகும். தற்பொழுது சரியாக சொத்துக்களை இனங்கண்டு ஒவ்வொரு விடயமாக தனித்தனியாக சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | சான்றுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செயற்பாடற்ற கணக்குகளின் வரவு மீதி | 1,290,782,781 | விபரமான பட்ஹேடாலை | இந்த ரூபா 1,290,782,781 வரவு மீதியினுள் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு கிடைக்க வேண்டிய பணம் உள்ளடக்கியிருப்பதனால் அது தொடர்பாக மேலும் விடயங்களை ஆராய்ந்து பார்த்து செயற்பாடற்ற கணக்குகளை சரிசெய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவினால் உரிய அறிக்கையை வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் சரிசெய்தலினை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | உரிய மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் அந்த மீதிகள் தொடர்பாக உரிய செம்மையாக்கலினை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,666,494 கடன்பட்டோர் மீதியினுள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,745,604 தொகையும் 02 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 2,413,953 தொகையும் கடன் மீதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக ஐயக்கடனுக்காக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேற்கூறிய மீதி தொடர்பான மீதிகளை உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக உரிய மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வின் போது மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | பெறவேண்டிய மீதிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் தேவையான எழுத்துமூல சான்றுகளை கணக்காய்விற்கு வழங்குதல் வேண்டும். மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்தவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,833,830,765 தொகையான வணிக கடன்கொடுத்தொர் மீதியினுள் 10 ஆண்டுகளை மிகைத்த கடன்கொடுத்தோர் மீதி ரூபா 576,577,491 தொகையும் 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கடன்கொடுத்தோர் ரூபா 432,275,302 தொகையும் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கடன்கொடுத்தோர் மீதி ரூபா 513,266,201 தொகையும் காணப்பட்டதுடன் உரிய மீதிகளுக்கான மீதிகளை உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் 10 கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக ரூபா 90,420,175 வரவு மீதிகள் அவதானிக்கப்பட்டன. | இம்மீதிகள் முன்னைய ஆண்டுகளிலிருந்து காணப்பட்டுவரும் மீதிகளாகும். மேற்கூறிய மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளுக்கான விபரமும் பட்டோலைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு உள்நாட்டு கொள்வனவு முற்பணங்கள் கணக்கில் ரூபா 1,468,624,856 மீதி காணப்பட்டதுடன் அதற்கான பட்டோலைகள் வழங்கப்படாததன் காரணமாக அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் அதில் ரூபா 1,467,253,615 மீதியானது 02 ஆண்டுகளுக்கம் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக காணப்படுகின்றது என்பது வெளிப்படுத்தப்பட்டது. | உரிய தவறு இடம்பெற்றுனள்ளது. எதிர்காலத்தில் முறைப்படியாக உரிய ஆவணங்களை வழங்குவதற்கும் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்துவைத்தல் தொடர்பாக அதிக கவனம் செலுத்துதல் அத்திவசியமானதாகும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் 2008 சனவரி 28 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | வாகனங்களை சேவை செய்தல் சம்பந்தமாக அனைத்து டிப்போக்களினாலும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சபையின் எந்த டிப்போக்களினாலும் அந்த அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வாகனங்களை சேவை செய்தல் சம்பந்தமாக அனைத்து டிப்போக்களையும் ஆரம்பிக்கும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். எனினும் தற்பொழுது இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களை ஸ்தாபிக்கும் போது இந்நடைமுறையினைப் பின்பற்றுவது பற்றி கவனம் செலுத்தப்படவில்லை என ஏற்றுக்கொள்கிறேன். | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பீஈடி 2/2015 ஆம் இலக்க 2015 மே 25 ஆந் திகதிய | மீளாய்வாண்டின் போது சபையினால் அதன் உத்தியோகத்தர்களுக்காக நடமாடும் | பதில் வழங்கப்படவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரசாங்க நிருவாக சுற்றிக்கை | தொலைபேசி வசதிகளுக்காக ரூபா 7,729,446 செலவு செய்யப்பட்டிருந்தும் தெரிவுப் பரிசோதனையின் போது மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது சபையின் இணைப்புக்கள் 1,078 ஆக இருந்த போதிலும் 831 இணைப்புக்களின் தகவல்கள் மாத்திரம் ஆவணப்படுத்தப்பட்டிருந்தன. 59 இணைப்புக்களை பயன்படுத்துபவர்கள் யார் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்காத போதிலும் அந்த இணைப்புக்களுக்காகவும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | | எடுத்தல் வேண்டும். |
| (இ) | அரசாங்க நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | i. நி.பி. 387 | வங்கி மேலதிகப் பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்ளாதிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு சபையினால் ரூபா 62,423,460 பெறுமதியான மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ஆண்டின் போது ரூபா 382,052 தொகையான மேலதிகப் பற்று வட்டியும் செலுத்தப்பட்டிருந்தது. | இப் பெறுமதியில் பெரும்பாலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது காசேட்டின் படியான மேலதிகப் பற்றாக இருப்பதுடன் வங்கி கூற்றின் பிரகாரம் மேலதிகப் பற்று வசதிகளைப் பெற்றிருப்பது மிகவும் குறைந்த டிப்போக்கள் மாத்திரமாகும். | உரிய நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | ii. நி.பி. 395 (இ) | 05 பிராந்திய அலுவலகங்கள், 04 பிராந்திய டிப்போக்கள் 03 டிப்போக்கள் 02 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தினால் பேணப்பட்டு வருகின்ற | 395 (இ) இலங்கை போக்குவரத்துச் சபையினால் 2020 ஆம் ஆண்டிலிருந்து வங்கி கணக்கிணக்க கூற்றுக்களைத் தயாரித்தலானது கணக்கீட்டு முறைமையின் மூலம் | உரிய வங்கி கணக்கிணக்க கூற்றுக்களுடன் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 19 வங்கி கணக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி மாதத்திற்கான வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அக்கணக்குகள் தொடர்பான மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் மற்றும் திசெம்பர் மாதத்திற்கான வங்கி கணக்கு கூற்றுக்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. | மேற்கொள்ளப்படுகின்றது. எனவே இலங்கை போக்குவரத்து சபையானதுர் அனைத்து பிரிவுகள் தொடர்பாக தயாரிக்கின்ற வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் அனைத்தையும் கணக்கீட்டு முறைமையின் மூலம் பரீட்சிக்க கூடிய இயலுமை காணப்படுகின்றது. | |
| iii. | நி.பி 395 (ஈ) | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் காசாக மாற்றப்படாத காசோலைகளின் பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் மாதம் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றுக்களின் பிரகாரம் வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 17,577,369 தொகைக்குரிய காசோலைகள் தொடர்பான பட்டியல் சமர்ப்பிக்கப்படவில்லை. | இலங்கை போக்குவரத்துச் சபையினால் 2020 ஆம் ஆண்டிலிருந்து வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் கணக்கீட்டு முறைமையின் மூலம் இடம்பெறுகின்றது. அந்த முறைமையின் மூலம் வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் மற்றும் வைப்புச் செய்யப்பட்ட எனினும் தேறப்படாத காசோலைகள் என்ற தொகுதிக்குரிய பட்டியல் அதிலே உள்ளடக்கப்பட்டுள்ளது. | உரிய பெறுமதியைக் காட்டும் காசோலைகளின் பட்டியல் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| iv. | நி.பி 396 | 06 ஆண்டுகளுக்கு மேல் வழங்கப்பட்ட எனினும் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 2,977,706 பெறுமதியான காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது அப்பெறுமதியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதியள பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கை | | | | |
| | i. | 5.1.2 ஆம் பிரிவு | குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபை அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் 5.1.2 ஆம் பிரிவானது 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரச் சட்டத்திற்கு இணங்க சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தி செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| | ii | 5.2 ஆம் பிரிவு | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் கூற்று, பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை, பாதீடு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று, பாதீடு செய்யப்பட்ட மூலதனச் செலவுகள் என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபை அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிக்கும் போது பெரும்பாலும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படு வது மூலதனச் செயற்திட்டங்கள் மற்றும் அவை சார்ந்த செயற்திட்டங்கள் என்பதுடன் அச்செயற்திட்டங்கள் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகள் உரிய செயற்திட்டங்களில் காட்டப்பட்டுள்ளன. | உரிய சுற்றறிக்கையின்பிர காரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு மற்றும் 3.2 ஆம் பிரிவு | | மேலதிக நேர வேலைக்காக பணத்தை செலவு செய்யக் கூடியதானது உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஏனைய எந்த வழியும் இல்லாதுள்ள விசேட சந்தர்ப்பங்களின் போது | இலங்கை போக்குவரத்துச் சபை நிதி அதிகாரங்களை ஒப்படைத்துள்ளமைக் கு இணங்க மேலதிக நேர வேலை சம்பந்தமாக அங்கீகாரத்தினை வழங்கக்கூடிய | தாபனவிதிக் கோவையில் காட்டப்பட்டுள்ள வாறு மேலதிக நேர வேலைக்காக விசேட சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் |

| | | |
|---|---|---|
| மாத்திரம் மற்றும் உறுதியாக நிர்ணயிக்கப்பட்டதான வழக்கமான வேலை செயற்பாடுகளிலிருந்து நிச்சயமாக புறம்பானதும் அவசரமானதாக இருந்தும் வழக்கமான நேரங்களுக்குள் செய்யமுடியாததுமான வேலைகளுக்காக மாத்திரமாக இருந்த போதிலும் சபையின் ஊழியர்களுக்கு மட்டுப்பாடின்றி மேலதிக நேர வேலைப்படிகள் வழங்கப்பட்டிருந்தன. சபையின் தலைமை அலுவலகத்தில் சம்பளம் பெறுகின்ற 708 உத்தியோகத்தர்கள் கடமைகளை நிறைவேற்றுகின்றார்கள் என்பது அவதானிக்கப்பட்டதுடன் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது மீளாய்வாண்டில் சபையின் 177 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த சம்பளத்திற்கு மிகையாக ரூபா 12,573,754 பணம் மேலதிக நேர வேலைப்படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. | அடிப்படையில் மேலதிக நேர வேலைக்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. | ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசும் காசுக்குச் சமனான சொத்துக்கள் கணக்கின் மீதி ரூபா 1,167.5 மில்லியன் தொகை வங்கி பணக் கணக்கின் மீதி ரூபா 961.4 மில்லியன் தொகை, | பதில் வழங்கப்படவில்லை. | வங்கி கணக்குகளில் போதியளவு பணம் காணப்படுகின்ற போதிலும் வங்கி மேலதிகப் பற்று மேற்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையிலுள்ள பண மீதிகள் ரூபா 158.1 மில்லியனாக இருந்ததுடன் 10 பிராந்தியங்களின் வங்கி மேலதிகப் பற்று மீதி ரூபா 62.4 மில்லியனாகக் காணப்பட்டது. இதற்கிணங்க சபையின் நிதி முகாமைத்துமானது வினைத்திறனற்ற வகையில் இடம்பெறுகின்றது என்பது இதன் மூலம் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | வவுனியா டிப்போவின் நிலையான வைப்புக்களை மீளப்பெற்று ரூபா 25,000,000 பணம் கடன் அடிப்படையில் தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. தலைமை அலுவலகமானது சமமான 10 தவணைப் பணங்களில் அக்கடனை தீர்த்துவைக்க வேண்டிய போதிலும் 2022 பெப்ரவரி 17 ஆந் திகதி வரை எதுவித கொடுப்பனவும் செய்திருக்கவில்லை. அப்பணத்தை வழங்கியதனால் வவுனியா டிப்போவிற்கு நிலையான வைப்பின் மூலம் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 6,754,832 வட்டிப் பணம் இழக்கப்பட்டிருந்தது. | இலங்கை போக்குவரத்துச் சபையினால் உழைக்கின்ற வருமானங்கள், நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தலானது தொடக்க குறிக்கோளாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படாததுடன் நிறுவனத்தின் நாளாந்த தேவைப்பாடும் ஊழியர் சம்பளக் கொடுப்பனவும் முற்பணங்கள் செலுத்துதல் முதலிய தொடக்க விடயங்களை குறிக்கோளாகக் கொண்டு நிதி நிருவாகம் இடம்பெறுகின்றது. | தலைமை அலுவலகத்தின் மூலம் சரியான நிதி முகாமைத்துவத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,059,980,180 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 2,103,088,145 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவகளில் ரூபா 956,892,035 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ரூபா 3,785,259,102 ஆல் வருமானம் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சபையின் வருமானத்தினுள் உள்ளடக்கப்பட்ட நுழைவுப்பத்திர வருமானம் 19 சதவீதத்தினாலும் பயண அனுமதிப்பத்திர வருமானம் 42 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

**..........................................**

மீளாய்வாண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் 1:1.05 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் 1:0.72 ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**....................................**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

**....................................................**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| .................................................. | ............................. | ............... |
| (அ) சபை 2018 மார்ச் 20 ஆந் திகதி ஒருகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக ஒரு தனியார் கம்பனியுடன் ரூபா 61,014,316 பெறுமதிக்கு உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் 2018 யூன் 20 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரையும் நிர்மாண நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாதிருந்ததுடன் 2021-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 26,765,705 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு முரணாக விலை குறைந்த கேள்வி மனுவினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது விலை கூடிய மனுதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதனால் சபைக்கு ரூபா 2,102,126 நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்படாமையால் சபைக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தினை | ஒருகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தினை நிர்மாணிப்பதற்குரிய பெறுகை நடவடிக்கையானது பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்காமை சம்பந்தமான புலனாய்வினை மேற்கொள்வதற்காக இது தொடர்பான கோவைகள் இலங்கை போக்குவரத்துச் சபையின் விசேட புலனாய்வுப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என கேள்விப் பிரிவின் மூலம் அறிவிக்கப்பட்டது. | நிர்மாணங்களுக்கான உரிய உடன்படிக்கையானது நிர்ணயிக்கப்பட்ட ஆலோசனை கோவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமுல்ப்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கணக்காய்வு பரீட்சிப்பு சந்தர்ப்பத்தின் போது ரூபா 12,610,500 பெறுமதியான 07 டீசல் மற்றும் பெற்றோல் பம்பிகள் அக்காணியில் எதுவித பாதுகாப்புமின்றி குவித்துவைக்கப்பட்டிருந்ததுடன் எரிபொருள் தாங்கிகளின் மூடிகளின் மூலம் வைக்கப்பட்டிருந்த எரிபொருள் ஒப்பந்தக்காரரினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. எனினும் இது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சபையினால் 09 மாகாணங்களில் 09 புகை வெளியாகுதல் பரிசோதனை நிலையங்களை நிர்மாணிப்பதற்குரிய உபகரணத் தொகுதிகள் 2018 ஏப்ரல் 26 ஆந் திகதி மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வாகன புகைவெளியாகுதல் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திடமிருந்து பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் இந்த நிலையங்களை நிர்மாணித்தலானது சாத்தியவள ஆய்வின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த புகை வெளியாகுதல் பரிசோதனை நிலையங்களுக்கு மத்தியில் குருனாகல், மதவாச்சி ஆகிய நிலையங்களை நிர்மாணித்தல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் சட்டரீதியான சிக்கல்களினால் உரிய நிலையங்கள் மூடப்பட்டதன் காரணமாக அந்த நிலையங்களில் ரூபா 18.75 மில்லியன் பெறுமதியான இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்படுகின்றன எனவும் | இலங்கை போக்குவரத்துச் சபை 09 புகை வெளியாகுதல் பரிசோதனை நிலையங்களை நிர்மாணிப்பது தொடர்பாக திட்டங்களை தயாரித்திருந்தது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். எனினும் தற்பொழுது குருனாகல், மதவாச்சி, இரத்மலானை ஆகிய புகை வெளியாகுதல் பரிசோதனை நிலையங்களை செயற்படும் நிலையில் காணப்பட்டு கடந்த காலங்களில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக செயற்பாடற்ற நிலைக்கு மாறியுள்ளது. | மூலதனச் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது சாத்தியவள ஆய்வினை மேற்கொண்டு அதற்கிணங்க வினைத்திறனான செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அச்சொத்துக்களைப் பயன்படுத்துவதற்குரிய சிவில் வேலைகளை நிர்மாணிப்பது தொடர்பான ரூபா 89.84 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தில் ரூபா 22.48 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 மே 30 ஆந் திகதியளவில் அந்த நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்ட 03 நிலையங்களும் விளைவற்றுக் காணப்பட்டன. | | |
| (இ) | சபையின் 125 அதிசொகுசு பஸ்களுக்காக கமரா மற்றும் ஜி.பீ.எஸ் (GPS) முறைமையை பேணுவதற்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஒரு தனியார் கம்பனியுடன் ரூபா 33,628,840 தொகைக்கு உடன்படிக்கை செய்திருந்தது. இச்செயற்திட்டத்தினை மேற்கொள்வதற்கு முன்னர் தொடக்க சாத்தியவள ஆய்வு, கிரய பிரதிபலன் பகுப்பாய்வு பெறுபேற்றினை முன்னறியும் முறைமை என்பன தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்காக உரிய பெறுகை உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிட வேண்டியிருந்த தாமதக் கட்டணமாகிய ரூபா 3,362,884 தொகை வழங்குனரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யும் போது தாமத கட்டணத்தை அறிவிடுவது சம்பந்தமாக சிக்கல் நிலை உருவாகியுள்ளதனால் அனைத்து விபரங்களையும் உள்ளடக்கி பணிப்பாளர் சபைக்கு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்த பணிப்பாளர் சபை பத்திரம் தொடர்பாக நட்டத்தை அறவீடு செய்யாது உரிய வழங்குனருக்கு பணத்தை செலுத்துமாறு தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது. அந்த தீர்மானத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டது. | ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கை நிபந்தனைகளை மீறிய சந்தர்ப்பங்களின் போது கொடுப்பனவு செய்யப்படாதிருத்தல் வேண்டும். |
| (ஈ) | சபையிடம் ரூபா 226,417,397 பெறுமதியான 10,575 டிக்கட் மெசின்கள் காணப்பட்டதுடன் அதில் ரூபா 107,070,821 பெறுமதியான 4,250 மெசின்கள் அதாவது 40 சதவீதம் அளவானவை செயற்பாடற்று இருந்தன. எனினும் சபையினால் இந்த மெசின்களை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை | 50 சதவீதத்திற்கு மேற்பட்ட மெசின்கள் 05 ஆண்டுகளுக்கு மேல் பழைமையாகியிருந்ததனால் அடிக்கடி இடர்களுக்கு உள்ளாகியிருந்தன. 2019 ஆம் ஆண்டின் பின்னர் டிக்கட் மெசின்கள் கொள்வனவு செய்யப்படாமையால் டிக்கட் மெசின் தேவைப்பாடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை . | உரிய டிக்கட் மெசின்களை கொள்வனவு செய்யும் போது ஆயுட்காலத்தினுள் சேவை செய்தல் மற்றும் பராமரித்தல் உடன்படிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ல. இந்த மெசின்களுக்கு மத்தியில் 493 மெசின்களை திருத்தம் செய்வதற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் திருத்தம் செய்யும் நடவடிக்கை துரிதமாக இடம்பெற்றிருக்காததுடன் ரூபா 432,305 பெறுமதியான 23 மெசின்கள் காணாமல் போயிருந்தன. | | |
| (உ) | Park & Ride செயற்திட்டத்தின் கீழ் ஓடுவதற்கு இலக்கிடப்பட்ட பஸ்களின் எண்ணிக்கையானது கொழும்பு மாவட்டத்தில் 25 பஸ்களும் கண்டி மாவட்டத்தில் 06 பஸ்களுமாகும். இது சம்பந்தமாக ஓடுதல் மற்றும் வருமானங்கள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.<br>எனினும் Park & Ride செயற்திட்டத்திற்காக 25 GPS இயந்திரங்களை வெளித்தரப்பினர்களின் பஸ்களுக்கு பெருத்துவதற்காக சபையினால் ரூபா 939,750 பணம் செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த பஸ்கள் தற்பொழுது ஓடுவதிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. மேலும் பஸ்களுக்கு பொருத்தப்பட்ட கமராக்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்செயற்திட்டத்திற்காக தனியார் துறையின் 25 பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டதுடன் அவற்றிற்காக 25 GPS இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. அந்த பஸ்கள் 2021 ஆம் ஆண்டில் கொவிட் காலப்பகுதியில் ஈடுபடுத்துதல் இடைக்கிடையே இடம்பெற்றதனால் அதன் வருமான நிலைமையானது மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டதனால் பஸ் உரிமையாளர்களுக்கு கிடைத்த வருமானம் மிகவும் சிறிய அளவில் காணப்பட்டது. அவ்வாறு அகற்றப்பட்ட பஸ்களுக்காக பொருத்தப்பட்ட GPS இயந்திரங்களை மீண்டும் ஒப்படைக்குமாறு தொலைபேசியின் மூலம் மற்றும் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்படவில்லையாயின் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | உரிய செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது சரியாக உடன்படிக்கை செய்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அவலற்றின் கிரய பிரதி பலன் பகுப்பாய்வினை ஆய்வு செய்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | சபையின் பிராந்திய அலுவலகங்கள், டிப்போக்கள், சாரதி பயிற்சி பாடசாலைகள், பிராந்திய வேலைத்தளங்கள் என்பன செயற்படுத்தப்படுவதுடன் அவை நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. அந்த நிறுவனங்கள் அமைந்துள்ள காணிகள் சம்பந்தமாக சட்டரீதியான உரிமையுள்ள | தற்பொழுது சபையின் காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. அதற்கிணங்க மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்து 14 இறுதி அறிக்கைகளை தற்பொழுத வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 157 அலகுகளுக்குரிய | சபையின் காணிகள் சம்பந்தமாக ஒரு பதிவேடு பேணப்படவேண்டியதுடன் அக்காணிகளை சரியாக கணக்கறிக்கைகளில் அறிக்கையிடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகை அடிப்படையில் பெற்றுள்ள காணிகள் ஒப்படைப்பு அல்லது வேறு ஏதாவது வகையில் பெற்றுள்ள சபையின் அனைத்து காணிகள் தொடர்பாக சபையினால் நாளதுவரையாக்கப்பட்ட காணிகள் தொடர்பான ஒரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. சபையின் அனைத்து காணிகளையும் இனங்காணல், உரிமையை தீர்த்துவைத்தல், அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்தல் என்பன மீளாய்வாண்டின் இறுதிவரை இடம்பெற்றிருக்கவில்லை. மேலும் சபையிடம் உள்ள பயன்படுத்தப்படுகின்ற காணிகள் பாதுகாப்பின்றி காடு வளர்ந்து காணப்பட்டன. | மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்காணிகள் சம்பந்தமாக உரிமையினை உறுதிப்படுத்திக்கொள்ளல் சிக்கலான நடவடிக்கை என்பதனால் இதற்கு சில காலம் எடுத்துள்ளது. | |
| (எ) | 2022 யூன் 16 ஆந் திகதியளவில் சபையின் நாளாந்த பஸ் தேவைப்பாடு 7,339 ஆக இருந்ததுடன் காணப்படுகின்ற பஸ்கள் 6,951 ஆகும். இவற்றில் 32 சதவீதமானவை ஓடாத நிலையில் காணப்படுகின்றன. ஓடுகின்ற 4,718 பஸ்களில் 2,742 பஸ்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்தவையாகும். | உதிரிப்பாகங்கள் மற்றும் பெற்றரிகளை வழங்குவதற்கு இருந்த தடையினால் பஸ் ஓடுதல் தடைப்பட்டுள்ளதுடன் நீண்டகாலமாக ஊழியர் வெற்றிடங்களின் காரணமாக சில பஸ்கள் ஓடுவதிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க அளவு காலமாக பஸ் அணிக்காக பஸ்களை கொள்வனவு செய்யாமையால் பஸ் அணி நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்படியாக கால அட்டவணைத் தேவைப்பாட்டினை கவனித்துப் பார்த்து பஸ் அணியினை ஓடும் நிலையில் பேணுவதற்கு சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | சபையின் வேலைத்தளங்கள், சாரதிப் பாடசாலைகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் என்பன தொடர்ச்சியாக 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நட்ட நிலையில் பேணப்பட்டு வந்ததுடன் அவற்றினை இலாப நிலைக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சபையின் சாரதி பாடசாலைகள், வேலைத்தளங்கள், எரிபொருள் நிரப்ப நிலையங்களை இலாபம் ஈட்டும் நிலைக்கு கொண்டு வருவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க தொழில்முயற்சிகளின் வளங்கள் வரிசை அமைச்சிற்கு வழங்கப்படாதிருக்க வேண்டிய போதிலும் சபையின் 11 உத்தியோகத்தர்கள் போக்குவரத்து அமைச்சின் கடமைகளை நிறைவேற்றியிருந்ததுடன் சபை அவர்களுக்காக சம்பளங்கள் மற்றும் மேலதிக நேர வேலைப்படிகளைச் செலுத்தியிருந்ததுடன் அதனை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஒக்தோபர் மாதத்திலிருந்து போக்குவரத்து அமைச்சின் கடமைகளை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களுக்காக இலங்கை போக்குவரத்து சபையினால் 07 நபர்களுக்காக செலுத்தப்படுகின்ற சம்பளங்கள் மற்றும் மேலதிக நேர படிகளை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 127 நர்ட்கள் தாமதத்துடன் 2022 யூலை 04 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக பதவியினர் வேசவைக்காக சமூகமளித்தல் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயல்முன்னேற்றத்தைப் பரீட்சிக்கும் போது இந்திய கடன் வவசதிகளின் கீழ் 600 பஸ்களை பஸ் அணியில் சேர்த்துக்கொள்வதற்கு ரூபா 3,506 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 05 ஆண்டுகளின் போது இந்த 600 பஸ்களுக்கான பெறுகை நடைமுறை முடிவடைந்திருந்த போதிலும் பஸ்களை கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 32 ஆசனங்களைக் கொண்ட 500 பஸ்களை கொள்வனவு செய்யும் பெறுகையின் கீழ் 500 பஸ்களுக்கான மொத்த செலவாக ரூபா 5,741 மில்லியன் செலவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் தற்பொழுது காணப்படுகின்ற பொருளாதார நிலைமையினை முன்னிட்டு தொடக்கமாக ரூபா 850 மில்லியனை ஈடுபடுத்தி ஆரம்பத்தில் 75 பஸ்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் இன்னும் 200 பஸ்களை கொண்டு வருவதற்கு பொதுத் திறைசேரியினூடாக பணத்தை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் நடவடிக்கைகளை அந்த ஆண்டிற்குள் அமுல்ப்படுத்துதல் வேண்டும். |